# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 450/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-2/PW-2 |
| Name | :செந்தமிழ்செல்வன் |
| Father/Husband's Name | :ராஜபாண்டியன் |
| Village | :பொத்தேரி |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.05.2025.

**முதல் விசாரணை–**

நான் தற்போது ஆட்டோ ஓட்டுநராக இருக்கிறேன். கடந்த 25.05.2023 ஆம் தேதி நானும் என் நண்பன் சந்தோஷ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் மறைமலைநகரிலிருந்து பொத்தேரிக்கு சென்றுகொண்டிருந்தோம். அப்போது மறைமலைநகர் நகராட்சி பெட்ரோல் பங்க் எதிரே நடைபாதையில் வந்தபோது எங்களை கடந்து பென்ஸ் கார் வேகமாக சென்று, நடைபாதையில் ஓரமாக நின்றிருந்த ஒரு பெண் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. நான் அப்போது அந்த விபத்தை சத்தம் கேட்டபோது பார்த்து எனக்கு முன்னால் நிறைய வாகனங்கள் இருந்ததால் நான் பக்கவாட்டில் சென்று பார்த்தேன். அப்போது விபத்தில் அடிப்பட்டிருந்த பெண் நபரை மற்றவர்கள் தூக்கினார்கள். நான் அருகிலிருந்து பார்த்தபோது அவர் என்னுடைய நண்பருடைய அம்மாவாக இருந்தார். உடனே என் நண்பருக்கு போன் செய்தபோது அவர் போன் எடுக்கவில்லை. பின்னர் மற்றொரு நண்பரான மோகன் என்பவருக்கு போன் செய்து தகவல் சொன்னேன்.

பிறகு என்னுடைய நண்பருடைய மாமா வந்தார்கள். இவ்விபத்தில் அந்த பெண்மணிக்கு இடதுபக்க உடல் முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் ஏற்றி அனுப்பியதாக நான் கேள்விபட்டேன். அன்று பென்ஸ் காரை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் ஆஜர் எதிரிதான். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

ஆட்டோ ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமத்தை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் அந்த சமயத்தில் FOOD Delivery வேலை செய்துகொண்டிருந்தேன். போலீசார் விசாரணையின்போது பெட்ரோல் பங்க் நடைபாதை என்று சொல்லியிருந்தேனா என்றால் இல்லை. முதல் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் நான் சென்று பார்த்தேன் என்று போலீசார் விசாரணையின்போது சொல்லியிருக்கிறேனா என்றால் விபத்து ஏற்பட்டது சென்று பார்த்தேன் என்று சொல்லியிருக்கிறேன். மற்றவர்கள் காயம்பட்டவரை தூக்கினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. விபத்தில் இறந்தவர் மற்றும் அவருடைய மகன் எனக்கு அறிமுகமானவர்கள் என்றால் சரிதான். அவர்கள் என்னுடைய நண்பர் மற்றும் நண்பரின் அம்மா.

அந்த இடத்தில் Zebra Crossing என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் இறந்தவரின் அஜாக்கிரதையாலும் மற்றும் சாலை விதிகளை கடைப்பிடிக்காததாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை என்பதனால் வாகனப்போக்குவரத்தும அங்கு அதிகம் இருக்கும் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் இறந்தவரின் மகனுக்கு போன் செய்தபோது அவர் எடுக்கவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டது இரவு நேரம் என்பதனால் அங்கிருந்தவர்களின் அடையாளம் எனக்கு சரியாக தெரியாது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனது வேலையின் பணி நேரம் என்ன என்றால் குறிப்பிட்ட பணி நேரம் கிடையாது.

சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் நானும் எனது நண்பரும் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், எதிரியை நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்பதனாலும், இறந்தவர் எனது நண்பரின் அம்மா என்பதனாலும், இழப்பீடு பெறுவதற்காகவும் அவர்களுக்கு அனுசரணையாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் வயதான பெண்மணி என்றால் சுமார் 50 முதல் 55 வயது உடையவர். இறந்தவர் வயதானவர் என்பதனாலும், இரவு நேரம் என்பதனாலும் அவர்தான் அஜாக்கிரதையாக சாலையில் நடந்தார் என்றாலும், எதிரி சாலை விதிகளை கடைப்பிடித்தார் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana,
Judicial Magistrate No.II,
Chengalpattu.